B. இரத்தின

திருமகள்விலாசகர் ஸன்ஸ்,

செ திரசாலை,

இதன் விலை] 1936. ணா 4.

உ

கடவுள் துணை

பெரிய எழுத்து

கபிலை கதை



B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

இதன் விலை] 1936. [அணா 2.

உ

கணபதிதுணை

கபிலை கதை

காப்பு

குவலையம தெண்ணவே கூறுதக்கைப் பாடிக்
கபிலை கதையைப் பாடிக்காணச்—சிவனர்
சடைவாற கங்கை திங்கள் தங்க வருள் தந்த
கடைவாயிற் கொம்பரனே காப்பு.

கணபதி

சீர்சிறந்த கபிலைகதை தெரிந்துரைக்கத் தக்கையிலே
பார்சிறந்து கேட்கும்வண்ணம் பனுவலுடன் பாடுதற்கு
சிந்தனையு மிகத்தெரிந்து சிதராமற் செம்மையுறக் 1
கார்சிறந்த மேனியனே கணபதியே காத்தருள்வாய்.

ஆறுமுகன்

பேறுபெற்ற கபிலைகதை பிரியமுற யான்பாட
மாறுபடு மசுரர்களை மடியவே வேல்வாங்கி
சேரும்மயில் தனிமேலேறி தேவர்சிறை மீட்டருளும் 2
ஆறுமுக வேலரிட வடியிணையை மறவோமே.

ஈசன்

வீசுபுகழ்க் கபிலைகதை மிகவிளங்கத் தக்கையிலே
ஆகமது ரஞ்சிதர வித்தாரமுட னடைவாய்
நேசமுடன் பாடுதற்கு நெஞ்சுதனிலே நினைந்து 3
ஈசனிட திருவடியை யெப்போதும் மறவோமே.

அரி

புறைசொல்லாக் கபிலைகதை பூதலத்திலே விளங்க
அறைதவிராதோடிவந்து உழுவைக்கு உண்மைசொன்ன
சுரபியினுன் மிருகேந்த்ரன் சுவர்க்கமுற்ற கதைபாட
அரவணையிலே துயிலும் அரிபாத மறவோமே.

நாமகள்

எண்ணரிய கபிலைகதை யெழுத்தோர் சீர்வழுவாமல்
பண்ணுடனே யான்பாடப் பங்கயத்தி லுறைமாதக்
கண்ணனட மருமகளை காரிகையார் கலைமகளை
நண்ணுமயன் றேவியெனும் நாமகளை மறவோமே. 5

அவையடக்கம்

தப்பில்லாக் கபிலைகதை தக்கையினான் பாடுவது
முப்பழமும் நல்லமுதும் முசியாம லுண்பவற்குக் [ழிந்து
கைப்பொரு ளில்லாவொருவன் கடைப்பாடெல்லா மொ
உப்பில்லாக் கூழையிட்டு வுபசரித்து நின்றதொக்கும். 6

முதனூல்

கண்பார்த்து பாண்டவர்க்குக் கங்கைமகன் சொன்னகதை
பெண்பாக்கியங் கொண்ட பிராமணரிற் பின்றொருவன்
வெண்பாச் சூரணையாக விரித்துரைத்த கதைப்படியே
பண்பார்த்துயானுமொன்றைப் பாடுகிறேன் றக்கையிலே.

(நூல் இரட்டை)

வரையில்வேய் முத்துமீன்பரப்ப மாரன் சிலைமுத்
துஞ் சங்குமுத்துங், கரைசேர் கழனிகள் வாவியெங்குங்
காடெல்லாம் வெண்ணிலாக்காட்ட, அரவின் மாணிக்க
விளக்கொளிகள் அகங்கள் தெருவெல்லாம் வெயிலெ
ட்ட, இரவோ பகலோவென் றறியாமல் எங்குமொளி
திகழ் சோணாடே. 8

கடையார் கரும்புகள் தனையொடித்துக் கடாவை
படிக்கவே முத்துதிர்ந்து, நடுசேர்வயலுறு வரப்பதெ
ங்கு நட்சத்திரமொக்கும் நன்னாடே, படைசெயாலையில்
பால்விளைத்து பச்சையரிதாளிலே மேய்ந்து, மடுவில்
வீழ்கின்ற வெருமைமுலைவாளைமீனுண் ணும்வள நாடே.

நாங்காதலிக்கின்ற குழல்சோர நாற்று நடுகின்றவய
ம்புரத்தே, கோங்காயப்பணைமுலைக் கடைமாதர் கோர
ணிகாட்டிய மந்திதனை, மாங்காய் தனையெடுத் தெதிரெ
றிய மந்தியிளந்தென்னை மரமேறி, தேங்காய் திருகியே
யெதிரெறியும் செங்கோல்வளவன்றன் றிருநாடே. 10

வேழக்குழுச்சோழன் வியசாலயன் விளங்கிவருகின்ற தஞ்சாவூர், சூழக் கோபுரமாடங்களும் சுற்றுமதில்களுஞ் சூழிகையும், வாழைக்கனி பலாக்கனி யுடைந்து மற்றும் வயலெங்கும் தேன்தேங்கி, ஆழத்திகழ் செம்பொன் காரிசூழமராவதிபோ லிருந்ததுவே. 11

சுசியானதுபெற்ற காவிரிசூழ் சோழமண்டலம்வளஞ்சிறப்பத், திசையாவருந்தஞ்சாவூர்தனிலே செங்கோல் வழுவாமல் நெறிநடத்தி, அசையாமணிகட்டி யரசாண்டு ஆறிலொன்று தன்கடமைகொண்டு விசையாலயனென வருஞ்சோழன் விளங்கிவருகின்ற காலத்திலே.

ஈதலிசை தர்மபுரியென்னு மோரகரத்தில்
வேதம நூலாகமங்கள் வேள்விநூல் காவியங்கள்
சோதிடமுந் தத்துவமுஞ் சொல்லுதற்கு வல்லவராய்
பேதமற வெண்ணாயிரம் பிராமணர்கள் வீற்றிருந்தார்.

அத்தமிகு மகரத்தி லவர்களுக்குப் பெரியவராய்
மெத்தபுக ழுன்னபதி வேதபதி யெனும்பார்ப்பான்
கைத்தலத்திற் றிரவியமும் கடுஞ்சுரபி யாடெருமை
முத்திரமுந்தான்படைத்து முசியாமல்வாழ்ந்திருந்தான்.

கூராரு மவர்களிட கோபாலனெனு மொருவன்
காராவு மிளஞ்சேயுங் கதலிவனந்தனில் மேய்த்து
சேரவெலாங் கொடுபோய் சிந்துநதி யெனுஞ்சுனையில்
நீராவே காட்டி நிரைபெருகுங் காலத்தில். 15

வேதியர்கள் பசுக்களெல்லாம் விளங்கிவரு மந்நாளிற்
கேதுவு டன்புதன்கூடிக் கேசரிக் கஞ்சாமிடத்தில்
மூதுரையிற் செவ்வாயும் முடச்சனியும் பிரகஸ்பதியும்
கோதண்டந்தனிற் கூடிக் கொடுங்காலம் வந்ததுவே. 16

இரட்டை

நல்லானதுபோல் நிலங்காய்ந்து காலந்தவறியே மழைமறுத்து, புல்லானதுசெடிமரங்களுடன் பூங்கொடிகளுஞ்சருகாகி, நில்லாதெனுமொரு நிழலுமற்று நீண்டகுளம்வாவி கிணறும்வற்றி, செல்லாவழக்குரைத்தவர் கிளைபோல் தீய்ந்துகிடந்ததே கானமெல்லாம். 17

தரையில் வனங்களெல்லா மொதுக்கித் தழைத்த
மரம் வெட்டிப்பகலிடையில், சுரபிமேய்க்கின்ற கோபா
லன்சேர்ந்து துயில்கின்றவேளையதில், பரவுகானகமத்
தனையும்பரந்துபசுக்களெல்லாம் பசித்து, வரையில்முளை
களுஞ் சருகுந்தின்று மலையினருகு சென்றோடியவே. 18

பாலைவனம்விட்டுக் குறிஞ்சிபுக்குப் பசியின் கொடு
மையால் மலையேறி, * ஓலைமணிநிறப் பசுக்களெல்லாம்
ஒன்றோடொன்றுபோய்க் கூடாமல், மேலைமலைப் புறந்
தனில்மேய்ந்து மீளும்பசுவுடன் மீளாமல், காலைப்பரு
வந்தனிலேறிக் கபிலையெனும் பசுக்கலங்கியதே. 19

ஒற்றை

ஓடுகலைமானினங்கள் ஒன்றுமெதிர்காணாமல்
தேடுவரைச்சிறுதவலை தின்றுபசிதீராமல்
பாடுபடவாய்க்காய்ந்து பசிபொறுக்கப்பல்லிருகி
காடுழன்று வருவேங்கை ‡ காராவைக் கண்டதுவே. 20

கடிந்தோடிவருவேங்கை கபிலையைப்பார்த்தேமகிழ்ந்து
பிடித்தபசியது தீரப்பெற்றேனென்றுசொல்லித்
திடத்துவசையாலோடிச் செங்கோலெங்கோள்வளவன்
படைத்தபெரும்புலிபோலே பசுவெதிரே நின்றதுவே.

புண்டரிகசெவிமலர்ந்து பொங்கனல்போற்கண்சிவந்து
§ தண்டையெனும்வால்முறுக்கித் தாளினுக்கிறைகழற்றி
மண்டைகவிழ்ந்துடல்சுருக்கி வாய்திறந்துபற்காட்டி
கண்டெதிரேகுழளமுழங்கி கபிலையின்மேல்பாய்ந்ததுவே

கிலிபிடிக்ககபிலைதனைக் கிளர்வேங்கைபாய்ந்ததினால் [ன்
ஒலிகடல்சூழ்வையகத்துள் உளமையிதற்கேதுசொல்வே
வலியம்பொடிநெடியரவம்மதியினை வந்தடைந்ததுபோ
புலியரசன்கபிலைதனை பூண்டிறுகபிடித்ததுவே. [ல்

---

* ஓலைமணிநிறம் என்பதை பச்சைமணிநிறமெனக் கொள்ளாது கதரு
கின்றவும் மணிகழுத்திற் கட்டியவும் புறநிறமுடையவும் எனக்கொள்க. ஓலை
என்பதற்கு ஓலைபோல் வற்றியவெனக் கொள்ளலுமொன்று.

‡ முன் கபிலை என்றது நிறநோக்காது பசுவின் பொதுமையாமாகை
யால், இவண் காராவென்றார்.

§ தண்டையென்பது-அடிவால்.

இரட்டை

விரலிராசன்கை யுகிரும்பற்றி விரும்பித்தேங்கியே
மெய்மறந்து, சிறிதுநேரத்தின் பிறகு தெளிந்து கபிலை
யங்கேதுசொல்லும், இறுதிவிதியயனென்றலையில்இட்ட
வெழுத்திதுவென்றேதான், உறுதியில்லையேயென் கன்
றுக்கு ஒருவரிலையெனக் கலங்கியது. 24

மூண்டுபிடிக்கின்ற மிருகேந்திரன் முகத்தை நோக்
கியே கபிலைசொல்லும், ஆண்டபிராமண ரன்னபதி அக்
கிராரத்தென் கன்றைக்கண்டு, தூண்டாவொழுகிய முலை
கொடுத்துச்சொல்லி யுச்சியை மோந்துகொண்டு, மீண்டு
வருகிறேன் கொன்றுதின்னுய் மிருகேந்திர னென்னும்
புலியரசே. 25

மிடைந்தபசியாலே நின்னுடைய வெற்கை யண்டி
னேன் பெருமானே, படர்ந்த உலகங்கள் பதினுலும்
பகைத்த பழிகாரனுலும், அடைந்தவரைக் காப்பறிவு
டைமையாக மாதியசொல்லுலகாண், நடந்தென் கன்று
க்கு முலைகொடுத்து நான்வந்தாற்பின்னைக் கொன்றுதின்
னுய். 26

முட்டமலடா நின்றென்றவந்தான் முயன்றுபெற்ற
கன்றுன்றேதான், பட்டிதனில் வரக்காணுமல் பார்த்து
முகம்வாடிப் பசித்துநிற்கும், கொட்டுப்பசுக்கள் தம்மடி
விற்சென்றுல் கொம்பாலிடித்துக் காலெறியும், விட்டுவிடு
வென்று கபிலைசொல்லி மிருகராசனை வேண்டியதே. 27

பெற்றமதலைக்கு மிகவிரங்கி பெரியபுலியுடனே கபி
லை, உற்றவியாகுலமத்தனையும் ஒக்கவே யெடுத்துரைத்தா
லும், பற்றிடாவரிப்புலிச்செவிக்குப் பசுத்தானுரைக்குஞ்
சொல் நுழையாது, கற்றசமர்த்தனுங் கல்விதனைக் கல்
லாதவனும்போ லிருந்ததுவே. 28

மெல்லப் பசுசொல்லக் கேட்டபின்பு மிருகேந்திர
னதற்கேதுசொல்வான், அல்லற்பெரும்பசியாற்றளர்ந்
தேன் அனேகநாளுண் டிரைகண்டுநான், சொல்லப்
பிள்ளைக்கு முலைகொடுத்து திரும்புவேனென்றுலார் நம்பு
வார், பல்லுக்கடுக்க நான் தின்பதன்றிப் பசுவேயுனைவிட
மாட்டேன். 29

கொடுத்தகைய யவல்தன்னை நம்பிக் குடத்தினவல்த னைப் போட்டுவிட்டு, பிடித்தகைய யவல் தினுமளவிற் பிற கேயிருந்தவன் கட்டி விட, அடுக்கவிருந்தவன் தான் நகைக்க அங்கே திகைத்தவன் கதைபோல, *மடிக்குணத்திசை தன்னைவிட்டு வழிபார்த்திருப்பேனோ காராவே. 30

வெண்பா.

பொன்றுவினையேனும் பொன்னதைக்காண்பதென்று
கன்றுதனைத் தேடிக் கதறியழுக-குன்றேறி
மேய்புலிக்கு நத்தி விதித்த விதிப்படியே
பாய்புலிக்குச் சிக்கும் பசு. 31

எய்த்துமலடாகி யிருந்தேனில்லை இடபதேவரை வேண்டிக்கொண்டு, முத்திபெறவென்று நினைப் பெற்றேன் முகத்தில் விழிக்காத பாவியானேன், கத்துங்கன்றேயென் கண்மணியே காண்பதினியென்றோ வென்றேங்கி, புத்திரசோபத்தினால் கபிலைபுதல்வன்றனைத் தேடிப் புலம்பியதே. 32

ஒற்றை.

பால்குடித்தசெவ்வாயும் பணிகழுத்துஞ்சிறுமிதிலும்
கோல்பிடித்தவாயார்முன்னே குணலையமாய்க்கூத்தாடி
வால்முருக்கிவிளையாடி வந்தெதிரே நிற்பதுவும்
கால்பிடித்தசிறுகுளம்பும் காண்பதென்றோகண்மணியே.
கன்றுகளும்நீயுமாய்க் காலையிலும்மாலையிலும்
மன்றுதனில்விளையாடி மான்போலகுதிகுதித்துப்
பொன்றிகழும்மணிகள் கொஞ்சப்புற்பறித்துநீராடல்
என்றுவரவினிக்காண்பே னென்னுடையகண்மணியே.
என்பசியினாலேதா னிரைதேடிமலையில்வந்தேன்
வன்பசியினாலுழன்றவரிப் புலிகைச்சிக்கிவிட்டேன்
தன்பசியாற்கொல்புலியுந் தருமத்தையறிந்திடுமோ
உன்பசிக்குமுலைகொடுப்பா ருண்டோவென்கண்மணியே.

இரட்டை.

கபிலைபேசிய மொழிகேட்டுக் கானபுலியுமங் கேது சொல்லும், அலைவளம்புத்தி நீயுரைத்தாய் † ஆர்க்குத்

---

* உதிரங்குடித்துமடித்ததையே முதலினுண்ணும்.

† ஆருக்குத் தாய் சதம், ஆருக்குப் பிள்ளை சதம் என்னும் பழமொழி அமைக்கப்பட்டது.

தாய்பிள்ளைசதமாச்சு, நவிலுங்கருத்தன்னை தான்சுமந்து கண்டுகலியும் வாழ்ந்திட்டவோ, குலையந்தனிற் பிறந்த வர்க்குங் குழவிசதமாச்சோ கோகுலமே. 36

நீடுநின்னுயிர் பிழைத்தாலன்றோ நின்றன்கன்றிக்கு நீபரிவாய், கேடுகெடுவால்நின் கன்றுதன்னைக் கேட்டு வருமோசொல் விதிவசந்தான், சாடும்வினையினாலே பிற ந்துதானே போங்கன்றை நீநக்காலேன், மாடென்பது தன்னைக் காட்டிவிட்டாய் மாடாமதிகெட்ட காராவே. 37

காயம்புலி வுரைதனைக்கேட்டுக் கபிலைதானும் பின் னேதுசொல்லும், போயுர்போகாத் தண்ணீரும் பூண்ட சரமும் நீங்கிடுமோ, தாயென்றும் பெற்றபிள்ளையென் றும் தலையைக்கொடுப்பார் சமர்க்களத்தில், நாயும்புலியே கொல் பெற்றவட்கும் பரிவும்பாசமும் நீங்கிடுமோ. 38

என்றுகபிலையங் குறைத்தபின்னை யிருந்த மிருகேந் திரனேதுசொல்வான், கன்றுதனையே நீ நினைத்துக்கொ ண்டு கதறிக்கதறியே யழுதாலும், கொன்று குருதியை நான குடித்துக் குடலைப்பிடுங்கியே நிணத்தசையைத், தின்று பெரும்பசிதீர்வதன்றி தீராதென்பசி தீராதே. 3[illegible]

பாலன்றனை நான்கண்ணிற்கண்டு பரிந்து வுச்சியை மோந்துக்கொண்டு, ஓலும்பால்தன்னை யான்கொடுத்து ஓடிவருகிறேனொருநொடியில், மேலுமுனக்கிது தருமங் கண்டாய் மிருகராசனேயென்றுசொல்லி,காலினுதிர்பட்ட காயத்துடன் கபிலைபுலிதன்னை நோக்கிவணங்கியதே. 40

முன்னேயென்கன்றின் சிறுபசியை முலையின்பாலமு தாற்றணிப்பேன், பின்னேமீண்டுவந்துன் பசியைப்பெ ருகி நிணத்தசையாற்றணிப்பேன், உன்னைப்பசிக்கவைத் தென்னுடைய உயிரைப்பேணியே யங்கிருந்தால், என் னைப்போலபாவிகள்தாம் இவ்வுலகத்திலுண்டோசொல்.

கல்லிலொருவித்து முளைத்தாப்போல் கடியபுலிரா சன் கருத்திளகி, சொல்லும்கபிலையி னிரக்கமெல்லாம் தோற்றசெவியினிற் கேட்டதன்பு, கொள்ளும் ராசாளி புராவைவிட்டுக்குறுகித்தேடியே மெனக்கேட்டாற்போல், பல்லிலகப்பட்ட வுன்னைவிட்டுப் பார்த்துப்பசித்து நானி ருப்பேனே. 42

இட்டவிளைசெந்நெற் கதிரைக்கொய்து இடுப்புத னில்வைத்துக் கொடியைச்சுற்றி, கட்டிவீழ்கின்ற மந்தி தன்னைக் கழனியுடையவன் கண்டடிக்கத், தொட்டகுழந் தை யுண்டென்றுசொல்லிச் சுரந்தமுலையதைத் தான் காட்ட, விட்டுவிட்டவன் கதிபெற்றதை மிருகராசனே கேட்டிலையே. 43

ஒற்றை

காணுறும்புலிவேந்தன் கபிலைபடும்பாடுகண்டு
ஊணுருமனமுருகி யொருவார்த்தையேதுசொல்லும்
தேனுகவார்த்தைசொல்லி தெண்டனிடுங்காராவே
போனால்நீவருவாயோ பொய்யோதானெனவுரைக்கும்.

பார்த்திருகிகன்றுக்குப் பாலூட்டிமெய்யுலர்த்தி
நீத்துவரமாட்டாமல் நெஞ்சுருகியுயிர்பேணி
ஏத்தரியவிவ்விடத்தே யென்னுடனேநீயுரைத்து
வார்த்தையினுற்சபதம் மறப்பையோகாராவே. 45

மலினபால்கொடுத்து மகனைவிட்டுநீவரினும்
மெலிவானகாயமெல்லாம் மேதினியில்பசுக்கள்கண்டால்
புலிவாயிற்போவர்களோ புத்திகெட்டபசுவென்று
சொல்லுவார்கள்சொற்கேட்டு சோர்குவையோகாராவே.

கல்லாதபுலியுரைக்கக் கபிலைபின்னேதுசொல்லும்
நில்லாதுநீர்விளக்கு நிற்குங்காணெய்விளக்கு
கொல்லாமல்விடுகைநன்று கொல்கினும்பொய்வார்த்தை
சொல்லாமலிருந்தவர்க்குச் சுவர்க்கங்காண்புலிவேந்தே.

மூளைமருவும்புலிவேந்தே மொழிகின்றேனின்னமுங் கேள், இளையவர்தம்போல்வார்த்தை எளிதென்றிங்கிரு ந்தாயே, அலைகடல்சூழ்வையகத்தில் அனதானவெறுப் போட்டு, விளைகின்றதர்மமெல்லாம் வேரறுக்குமரிவாள் காண். 48

உழுவையேபொய்யுரைத்தால் உடற்பிறப்பேநீகேளாய்
அழுகையெனும்நோய்பிடித்து அழிகருவாய்திரிவார்கள்
புழுவடிவாய்ச்சொல்லாகிப் புலையடுத்தபேய்வடிவாய்
எழுநரகும்புகுந்திடுவார் ஈடேறமாட்டார்காண். 49

தடம்புலியேபொய்யுரைத்தார் தம்மைவிட்டுப்போகாது
நடம்பயிலும்வறுமைபிணி நாவிரண்டுதான்பேசி
உடம்புக்குவால்கழுத்தில் உடனிருந்துபூண்டாப்போல்
கடும்பொய்யெல்லாந்திரண்டுகழுத்திலறிகண்டமுங்காண்

பலன்கதிமெய்யுரைத்தால் படைக்குறுபேறதுகேளாய்
* தலங்கிழிமேல்விரைந்து தாமரையின்பூநண்பன்
வளம்கொள்தலமூடுருவி வானவர்களெதிர்கொண்டு
அலங்கரிக்கப்பொன்னுலகில் அரசாளவீற்றிருப்பார். 51

இரட்டை

வேடைதனில்நொந்து பசுவுரைக்க மிருகராசனங் கேதுசொல்லும், தேடிமதலைக்கு முலைகொடுத்துச் சேர்ந்தபசுக்களுடன்சேர்த்து, வாடியிருக்கு மென்பசிதீர்க்க மனதிலழுக்கற்று நீகடுக, ஓடிவருகிறேனென்று சொன்னாய் உனக்குச்சபதம் யென்னவென்றான். 52

விறலியரசனேயுன்னை வைத்து மீண்டுநானிங்கேவாரேனாகில், குறையவளந்திடு மவர்பாவம் குருவுக்கிரண்டெண்ணினார்பாவம், மறையோர்தமைக் கொன்றிட்டார்பாவம் வழக்கை மூட்டிவைத்தார்பாவம், பறவைதனைக்கூட்டி சிறையில் வைத்தாற் பாவமெனக்கென்றதே கபிலை. 53

இட்டசபதங்கள் தனைக்கேட்டு என்னவென்ன வென்றதிசயித்து, கெட்டியென வெண்ணிச் செவிவழியே கேள்விநிறம்பியே கிருபையுற்று, கட்டுத்தறிதன்னிற் கட்டிவைத்துக் கங்குல்விடிந்தபின் தானொருவர், விட்டுவிடுகின்ற பசுப்போலே மிருகராசன் விட்டகலநின்றான்.

விடைதான்புலி கொடுத்தருளியபின் மெய்யிற்குருதியுங்கழித்தடியில், கடிபட்டுகிர்பட்ட காயத்துடன் கபிலை தள்ளாடித்தள்ளாடி, நடைகள்தடுமாறி நிலத்தில்வைத்து நன்றி புலிசெய்கை மனதில்வைத்து, படையிலகப்பட்டுப் பிழைத்தவர்போல் பார்ப்பார் புரம்நோக்கிப் போனதுவே. 55

* உண்மையாளர் ஞானிகளாய் கபாலதலங்கிழிவுறலால் மேன்மையானுயிர்மேற்செலுத்தி இரவிமண்டல மூடுருவலாதிய தன்மையான முத்திப்புகுவர் என்பது யோகசாஸ்திரம்.

தலையில் வடிகின்ற குருதியுடன் தருமபுரம் நோக்கிப்போம் வழியில், மலையில்வாழ்கின்ற மாநாகம் வயிற்றுக் கிரையொன்றுங் காணுமல், கலையுங் கடமானுஞ்சிக்காமல் கருதிவருவாரை விழுங்கும்படி, துலையாவழி கட்டி யிருப்பளவில் சுரபிதான்வந்தங் கெதிர்பட்டதே.

கோட்டையாங் கோட்டையுள்மதிலும் கொள்கைபோலுடல்மண்டலமும், ஈட்டுமெழுநிலைக் கோபுரம்போல் எடுத்தபடமுந்தன்பொன்முடியும்காட்டும், பிறைபோலே வளைந்தபல்லும் காருமின்னல்போ லெழுநாவும், நாட்டுப்பாறுபோற் றிறந்தவாயும் நாகராசன்கொண்டெதிர்ப்பட்டதே. 57

செம்பியரவின் வாய்சிக்கியதால் சிந்தைதனிலே மிகவுநொந்து, தம்பிள்ளை பசியும்பாராது தன்னையிழப்பதும் பாராது, தும்பியாவென்னை விழுங்கிவிட்டால் சொன்ன சவுதாயந்தன்னாலே, நம்பிப்புலி மெத்தப் பசித்திருந்தால் நரகமெனக்கென்றதே கபிலை. 58

சுற்றியாவது தான்பிடிக்கச் சுரபிதான் மனத்துள்ளோர்ந்துபற்றி, யுடன்புலி பாய்ந்ததுவும் பாய்ந்த புலிதன்னை வணங்கியதும், கத்துங்கன்றுக்கு முலைகொடுத்தும் கடுகிவருகிறேனென்றதும், சத்தியவாசக மத்தனையும் சர்ப்பராசனுக் குரைத்ததுவே. 59

ஒற்றை

ஆடரவமேது சொல்லும் அநேகநாளிரைகண்டுநான்
பாடுபடமாட்டாமல் பசித்தோடியிளைத்துவிட்டேன்
தேடுவெள்ளிகாலினிலே சிக்கினதுபோலெதிரே
நாடியகப்பட்டவுன்னை நான்விடவுமாட்டேனே. 60

நாயடியேனுனிகழ்த்தல் நாகரசேநீகேளாய்
காய்காய்த்தமரம்போலே காலோயவேசுமந்து [டோ
தாய்பகைத்தால்மக்களுக்குத் தான்வேறு துணையுமுண்
நீல்பகைத்தர்பல்லுயிர்க்கு நீநிலத்திற்றெய்வமுண்டோ.

சேலுலவுங்கடலுலகைச் சென்னிமணிமுடிமீதே
கோலிநிதஞ்சுமக்குமவன் கொன்றுதின்னத்தகுமோதான்
சூலுவந்தபிள்ளைதனைச் சுமந்ததாய்விழுங்குவளோ
வேலிபயிர்தனைமேய்ந்தால் விளையுமோவையகத்தே. 62

ஆயுங்கதிர்மதியை யமாவாசைபௌரணையில்
போய்விழுங்குமென்றுசொல்லி பூதலத்திலெல்லோரும்
தாயிழந்தகன்றதுபோல் தயங்குவதைப்பார்த்து
வாயிழந்துவிட்டுவிட்ட வலியரவுநின்குலங்காண். 63

இரட்டை

கடல்பெரியதாழியாக் * கனகவரைமத்தாக
நடுதறியேமதியாக நாகமேகயிறாக
பிடித்தமிர்தங்கடைந்ததுவும் பெருமானுஞ்சங்கரனும்
பகுப்பதுவும்பூண்பதுவும் பாம்பரசேநீயலவோ. 64

மழைமருவும்பூவுலகில் வலியரவின்சேதியெல்லாம்
கழைமருவுமிசைபோலக் கபிலையெனும்பசுவுரைக்கப்
பழமையெல்லாந்தான்கேட்டு படமசைத்துகொண்டாடி
அழகெனவேயகலவுரைத் தவ்வரசன்விடைகொடுத்தான்

கிலிபோயரவின் வாய்மிதிபட்டுக் கேள் நடுவில்லா
நாட்டகத்தே, வலியவன் கையிற்குத்துப்பட்டு மயங்கி
யொளியவன்போவதுபோல், புலியின்கையிலே சிக்குப்
பட்டுத் தர்மபுண்களுடன் புரம்நோக்கி, நெலியுங் கபிலை
போய்க்கன்றைக்கண்டு நேயமுடன் முலைகொடுத்ததுவே.

கைக்குள்ளரிவாளால் வெட்டுப்பட்டுக் கண்கள்சோ
ரவேகட்டுபட்டு, செக்குள் நெறுங்குறுதீங்கரும்பு தித்தி
ப்புத்தந்தவாறதுபோல், நெக்கும்புலிகையினுகிரும்பட்டு
நின்றகபிலை தன்னிளங்கன்றுக்கு, மெய்க்குள் விதனத
தைப்பாராமல் விரும்பிமுலை கொடுத்தருளியதே. 67

உச்சிதனைப்பசுமோந்துகொண்டு உள்ளங்குளிரவே
தன்கன்றுக்கு, மொய்ச்சிகரக்கின்ற முலைகொடுத்துமுகத்
தைவிழித்தங்கே நிற்கும்போது கச்சுக்கழுத்தடிக்காய
மெல்லாம் கன்றுதான்கண்டங்கேதுசொல்லும், அச்சம்
வருவானேன்கானகத்தில் அன்னைநீயெனக்கருள்வாயே.

மீதிற்படிக்கின்ற காயத்தையும் வெள்ளக் குருதியுங்
கண்டஞ்சியே, ஏதிப்படி வந்தமாயமென்ன என்னவெ
ன்னவென்றதிசயித்துப், பாதிப்பால்வந்துமிடற்றில்விழ
பாதிப்பால் கடைவாயில்விழ, காதிற்கசைவற முகம்பார்
த்துக் கன்றுதானுங் கண்கலங்கியதே. 69

---

* கனகவரை யென்பதை-மந்தரமலை எனக்கொள்க.

கனத்தகாயத்தைதான்பார்த்துக் கன்றுதான் பின்ன ங்கேதுசொல்லும், குனித்தசிலைக்கணை தாங்கியதோ கோ பாலன்கையிலடிபட்டதோ, வனத்திற்கோளரி பற்றிய தோ மலையிலேறி நீவிழுந்தனையோ, எனக்குநீ சொல்ல வேணுமென்று ஈன்றதாய் தன்னைவணங்கியதே. 70

ஒற்றை

வீட்டுவாசலிலிருந்து மேய்ப்போம்தாய்தனக்குக்
காட்டிலொருதீங்குவந்தால் கன்றுகளாலென்செயலாம்
கேட்டுநீயேதுசெய்வாய் கேளாமலேதுசெய்வாய்
ஊட்டறியபாலமிர்தம் உண்ணுயென்பாலகனே. 71

ஒக்கலுடனுடன்பிறந்தார் உடலுக்கோர்தீங்குவந்தால்
தக்கபுகழ்ப்பெரியோர்கள் தந்தைதாயானவர்கள்
மக்களுக்குச்சொல்வார்கள் வையகத்திலுள்ளபடி
துக்கமுனக்கடுத்தவகை சொல்லாயென்மாதாவே. 72

கல்லாதபுகழ்படைத்த கபிலைகன்றுக்கேதுசொல்லும்
புல்லாசையாலேநான் புலிவாயிற்சிக்கிவிட்டேன்
கொல்லாதேயென்னுடைய குழக்கன்றைமுலைகொடுத்து
நில்லாதுவாரனென்று நிர்த்தாரஞ்சொல்லிவந்தேன். 73

வெற்பிடத்திலேயிருக்கும்வேங்கைசெய்தநன்றியைநான்
தப்புரைக்கவொண்ணாது சத்தியத்தைகடக்கரிது
புற்பற்றிருக்குந்தருவாயிற் புத்திரனேயுனையிழந்தேன்
எப்பிறப்பிலுனைக்கண்டேன் என்னுடையகண்மணியே.

பாய்புலிக்குச்சிக்கிவிட்டேன் பாவியேன்பாலகனே
தேய்பிறைபோல்யிளைத்து தீராதபசியுடனே
தாயிழந்தகன்றுகித் தயங்குவதைத்தான்பார்த்து
வாயுலர்ந்துநாவறண்டு மயங்குவதற்குப்பெற்றேனுன்.

இரட்டை

வள்ளலெனப்பெற்றமாதாவே மலடாயிருந்துமெய் வருத்தப்பட்டு, பிள்ளைதனைபெற்ற பெறும்பேரும்பெற்ற தாய்தந்தைக்குதவியன்றோ, மெள்ளவுனைத் தின்னநம்பி நிற்கும் வேங்கை பெரும்பசி தீர்ந்திடவே, எள்ளத்தனை யும் நீயெண்ணமல் என்னுயிரை தரவொண்ணாதோ. 76

இருப்புக்கட்டியைத் தான்விழுங்கி இளவெந்நீருடன் மிளகையிட்டு, கருப்புகட்டியைத்தான்கலந்து கரைத்துகுடித்தாக்காற் கரைந்திடுமோ, தருப்புக்கட்டிய புலிதனக்குச் சத்தியவாசகந்தனையுரைத்தேன், குருப்புக்கட்டிய நின்னுயிரைக் கொடுத்தால்விடுமோ வென்பெரும்பாவம். 77

காருநிறம்பொரு கன்றரசே காலைநேரமே போய் மேய்ந்து, சேருங்கன்றுகள் தன்னுடனே சேர்ந்துவா வென்று புத்திசொல்லி, சாரும்பசுக்களைத் தானழைத்துத்தாள்கள்தனில்வீழ்ந்து வேண்டிக்கொண்டு, ஆறுமில்லையேயென்கன்றுக்கு அடைக்கல முங்களடைக்கலமே.

இறக்குந்தாய் பெற்ற பாலரெல்லாம் இருந்தார்க்கடைக்கலமெனும் வார்த்தை, பிறக்கும்வாசகமத்தனையும் பேசக்கேட்டீர்க ளெனவுரைத்து, உறக்க வென்றலைவிதிப்படியே ஊர்விட்டேகிறே னென்விதியால், கறக்கும்பசுக்கள் என்னுடைய கன்றுதானுங்க ளடைக்கலமே. 79

வேண்டா மென்னுநீ ராவினங்கள் விலக்கித் தடுப்பீர்களாமாகில், ஆண்டார்க்கொருபாவி யமுதுசொல்லி அகமுடையா டஞ்சியிருந்ததொக்கும், தாண்டும்புலி பசித்தங்கிருக்க தமியேனுடல்கொண்டிங் கிருப்பேனோ, மாண்டாலுமென் றன்னுடலுயிரும் வண்ணப் புலி முன்னே மாய்வேனோ 80

ஒன்றுனல்லது சொல்லாமல் ஒன்றிப் பொய்யாது சொல்லென, என்றும்பெரியோர்கள் சொல்மொழியை என்னவெனக்கேட்டு மறப்பேனோ, கன்றுசையினுல் வந்தென்னவினையால் கலங்கிக்கலங்கியேபாவிகொண்டு, பொன்றுமற் பொங்கியிருக்குமதோ போவேன்புலிமுன் போவேனே. 81

ஒற்றை

பிள்ளையெனுங்கலங்களிலே பேதளித்துநானிருந்தால்
கள்ளமெனுங்கலங்களிலே காலனென்னுமாபாவி
வெள்ளமெனுங்கலங்களிலே மீன்பிடித்தகதைபோலே
உள்ளமெனுங்கலங்களிலே உயிர்பிடிக்கவருவானே. 82

கனப்பரிவாய்ப்புத்திசொல்லி கன்றையுச்சிதனைமோந்து
இனப்பிரிவினாலையோ என்னேரஞ்சென்றதென்று
தனைப்பழகும்பசுக்களுடன் தமருடனே தான்சொல்லி
வனப்புலியின்பசியாற்ற மலைநோக்கிநடந்ததுவே. 83

வழிபார்த்துத் தானிருக்கும் வண்ணவரிப் புலிவந்தே, பழிபார்த்துயிந்நேரம் பசித்திருந்து விட்டாயே, மொழிவார்த்தைதவராமல் மூடிகிவந்தே னுனைத்தேடி, விழிபார்த்திங்கெனைத்தினென்று வேங்கைமுன்னே நின்றதுவே.

இரட்டை

காலைப்பருவந்தன்னில்வந்த கபிலைதனை புலிகண்டளவில், மூலமெனுந்தண்டைவான்முறிக்கி முரிநிமிர்ந்தான்முகம்நோக்கி, ஆலமெனு நஞ்சுதன்னிலொரு அமுர்தம்பிறந்திட்ட வாறதுபோல், கோலவரிப்புலிநெஞ்சகத்தே குணமுங்கிருபையும் பிறந்ததுவே. 85

வந்தகபிலை தன்முகம்பார்த்து வண்ணப்புலிவேந்தனேதுசொல்வான், எந்தப்பசுக்களு மென்னைக்கண்டால் ஏங்கிவாய்விட்டுக் கதறிடுங்காண், முந்திமொழிந்தது தப்பாமல் முன்னேயெனைத் தின்னுயென்றுசொல்லி, சிந்தைதெளிந்து மென்முகம்பார்த்து திடமாய்நின்றாயே காராவே. 86

சொன்னசவுந்தாயந்தப்பாமல் சுரபிநீயிங்கேவந்து நின்றாய், உன்னை நிகரான வொருவரையும் ஓதும்புவிதனில்நான்காணேன், பொன்னேயின்னுயிர்க் கொன்றவர்க்கும் பொய்யைமெய்யாக சொன்னவர்க்கும் என்னை மனுநீதி நெறிமுறையானுமறியவே யியம்புமென்றான். 87

கல்லுமருவியபுலியுரைக்கக் கபிலைதான்பின்னங்கேது சொல்லும், சொல்லும்பொருள்களும் வேதங்களுந் தொல்லைநூல்களுந் தர்மங்களும், அல்லும்பகலும் நீ கேட்டாலும் அங்கம்பிளந்து பல்லுயிரை யெல்லாம், கொல்லுமுனக்கு நானேசொல்வேன் கூடுநெறி நிற்க மாட்டாயே. 88

ஒற்றை

கூடுங்கண்காராவே குருவலவோ நீயெனக்கு
பாடுங்கானுன்னுடைய பாதமேகெதியெனக்கு
ஓடுங்காண்புலியின்னு னுன்னுலேயீடேற
நீடுங்காரணமெல்லாம் நீயெனக்குச்சொல்வாயே. 89

இன்றிடபமுதலாகஈயென்றதிருத
மன்றுதனிலாடுவன்கைமருவி விளையாடியமான்
கன்றுமுதல்மானினமும் கலையினமும்புல்வாயும் [டோ.
கொன்றுதின்னுமுங்களுக்குக் குருகொடுத்தாலாவதுண்

தாயே சொல்லென்றுசொல்லித் தாளிணையில் வீழ்ந்தவனே, பேயே போவென்றுசொன்னுல் பெருமையுனக்குண்டாகுமோ, பாயேநா னின்றுமுதல் பசுக்களுக்குநாயகமே, நீயேயென் னற்குருவும் நிலைமையெனக் கருள்வாயே. 91

இரட்டை.

பித்தனெனும் புலிதானுரைக்கப் பின்னுங்கபிலையங் கேதுசொல்லும், புத்தியாக மெய்சொல்லாமல் பொய்மைதனைச் சொல்லித்திரிவாரை, சித்தந்தெளிந்திடும் பெரியோரும் சேர்ந்தசபைதனிற் சிறியோரும், மைத்துனுகவே சாரமிட்டு மருவிநகைப்பார்கள் வையகத்தே.

நடுவேமுனிக்கொரு வார்த்தைசொல்லி நாடுநகரையும் பரிகொடுத்து, வடவனுகவே காசிதன்னில் மனைவி பிள்ளையும்மாறிவிட்டு, புடவிகாவல னரிச்சந்திரன் புலையன்வீட்டி னடிமைபட்டு, சுடலைநிலந்தன்னைக் காத்திருந்து சுவர்க்கமுற்றதுங் கேளாயோ. 93

முன்னே ஸ்ரீராமர் வீடணனர்க்கு மொழிந்தவாசகந் தப்பாமல், அன்னைசீதையைச் சிறையில்வைத்த அரக்கர் குலமெலாம் வேரறுத்து, பின்னைவீடணன் றனையழைத்துப் பெருமாள்திருக்கையால் முடிசூட்டி, இன்னமிருந் தரசாளுமென்று இலங்கைகொடுத்தது மறியாயோ. 94

ஒற்றை.

விரும்பான்கபிலைசொல்ல மிருகேந்த்ரனேதுசொல்வான்
குருவாகச்சொல்லுகிறேன் குறித்திருந்துநீகேளாய்

பெரும்பாவஞ்செய்தவரும் பெரும்பூசைமறந்தவரும்
அரும்பாவமுண்டோ ஆவரசேநீயுரைப்பாய். 95

பார்ப்பாரைக்கொன்றவரும் பாற்பசுவைக்கொன்றவரும்
பேய்ப்பாரிற்கடந்தவரும் பெண்கொலைகள்செய்தவரும்
வாய்ப்பாநஞ்சிட்டவரும் மண்ணோஞ்சொன்னவரும்
தீப்பாகவேநினைத்து தீமனையில்வைத்தவரும். 96

வித்தையோரஞ் சொன்னவரும் விருந்திருக்க வுண்டவரும், புத்திரனில்லாதவரும் புதுமனையைத் திறந்தவரும், வைத்தபொருளழித்தவரும் வழித்துணை போய்க்கொன்றவரும், பத்தினியைநல்லோரை பழுதுசொன்ன பாதகரும். 97

அளவாதநாழிவைத்து அங்குறையயளந்தவரும்
களவாகப்பதர்மண்லைக் கலந்துவைத்துவிற்றவரும்
குளம்வாவிகுறித்தவரும் கோவில்தனையிடித்தவரும்
உளவாகவேயிருந்து உயிர்ச்சேதஞ்செய்தவரும். 98

எண்ணுயிரம்பாவம் யிப்படிசெய்தவர்கள்
கண்ணுக்குமூக்குசெவி கால்குறைந்துகைகுறைந்து
நண்ணுகப்பன்றியைப்போல் நரகலையுந்தானருந்தி
அண்ணுந்துபாராமல் அருநரகில்வீழ்வாரே. 99

இரட்டை.

மேவுநரகங்கள் கபிலைசொல்ல மிருகேந்திரனதற்கேதுசொல்வான், பாவநெறி முறைமையத்தனையும்பசுவே நீசொல்ல நான்கேட்டேன், பூலோகத்திற் பிறந்தவர்கள் பொன்னுலகத்தில் வெளிப்படவே, தேவரறியவே தானதர்மஞ் செய்தார்பெரும்பேறுஞ் செப்புமென்றுர். 100

மண்ணிற் சிவபூசை குருபூசை மயேசுரபூசை செய்தவர்கள், அண்ணன்தம்பியை பேணினவர் அறவைப் பிணமெடுத் தொடுக்கினவர், தண்ணீர்ப்பந்தலை வைத்தவர்கள் தந்தைதாய்தனைப் பேணினவர், உண்ணுஞ்சோற்றினிற் பகுந்திட்டவர் உத்தமதானங் கொடுத்தவர்கள்.

கன்னிகாதானங்கள் செய்தவர்கள் கனகதானங்கள் செய்தவர்கள், அன்னதானங்கள் செய்தவர்கள் அரியத

வங்கள் நின்றவர்கள், பன்னுந்தமி ழறிவித்தவர்கள் ப்ர தேசிகள் பசியாற்றினவர், பின்னேயென்னுமற் கொடுத்த வர்கள் பேச்சுநெறிமுறை பெற்றவர்கள். 102

பிள்ளைபெற வீடுகொடுத்தவர்கள் பிள்ளைப்பால்தன்னை வார்த்தவர்கள், பிள்ளைமுடவர்க் குருபிகட்கும் பெண்கள் தானங்கள் கொடுத்தவர்கள், பள்ளிக்கூடமும் மடப் புரமும் பத்திசெய்துடன் கட்டினோர்கள், தெள்ளும் மறையவர்க்கில்லிடமும் செம்பொன்தானமுங் கொடுத் தவர். 103

தட்டுப்பாடுகள் காத்தவர்கள் தர்மப்பள்ளிவைத் தோதினவர், பெட்டிப்பாம்பையும் விடுத்தவர் பெரி யோர்தமைமெத்த பேணினவர், வட்டித்தானியம்விட்ட வர் மாடமாளிகைகட்டினவர், இட்டசீட்டைக்கிழிப்பித்த வர் ஏழைசிறைதனை விடுத்தவர். 104

நந்தவனந்தனை வைத்தவர்கள் நந்தாவிளக்கொளி யிட்டவர்கள், கொந்துமாமரம் வைத்தவர்கள் கோயிற் குளம்வாவி கட்டிவைத்தோர், அந்தணர்க்கன்ன மிட்ட வர்கள் அகங்கள்கொடுத் தாதரித்தோர்கள், பந்தியதனில் வைத்துண்டவர்கள் பரமசிவபூசைபண்ணினவர். 105

காமவேட்டையைத் தவித்தவர்கள் கரும்புதனைச் சூரையிட்டவர்கள், சாமந்தனிற்றுணைசென்றவர்கள் தத் துவஞானியாய்விட்டவர்கள், பூமிதானங்கள் கொடுத்த வர்கள் புனலைக்கடத்தியே விட்டவர்கள், ஓமம்வளர்த் திடுமனைதனிலே உத்தமபுருடரா யிருந்தவர்கள். 106

தாரந்தனைப்பேணிநின்றவர்கள் தப்பாவாசகஞ்சொ ன்னவர்கள், ஓரஞ்சொல்லாதார் பிறருடைய உடமைதன் னையே விரும்பாதார், வீரத்தனமுள்ள திறல்வீரர் விரும் பித் தின்பண்டங் கொடுத்தவர்கள், சாரும்பசுக்களுக்குறி ஞ்சிநட்டார் தக்கசுமைதாங்கி நட்டுவைத்தார். 107

ஆகிய இவர்கள்

வண்ணமணிப்பூந்தேரேறி மகரதோரணங்களையே கட்டி, அண்ணல் சந்திரசூரியர்கள் அமரானவரெதிர் கொளவே, பெண்ணிலரம்பையர் கவரியிட பேசுமூர்வசி

கூத்தாட, விண்ணுலோகத்தை முழுதாண்டு மீண்டுசிவ கதிபெறுவாரே. 108

சருவபாவங்களத்தனையும்தருமநெறிமுறையத்தனையும், மிருகேந்திரன்கேட்டு மனமகிழ்ந்து மீண்டும்கபிலையைத் தெண்டனிட்டு, பருவதந் தண்ணினின்றிறங்கிப் பசுவேபோவென்று விடைகொடுத்து, மிருகராஜனு முகமன்சொல்ல விரும்பிக் கபிலைமீண்டதுவே. 109

சாலத்தருமங்கள்தான்பொழிந்து தருமபுரம் நோக்கித்தான்போக, காலப்பருவந் தன்னில்வந்து கபிலையெனும்பசுத் தானும்வந்து, ஓலநிறமணிக் கன்றைக்கண்டு உவந்தேயினத்துடன்தான்கூடி, ஆலமணிமிடற்றோன் பதத்தை அன்பாய்மனதில் நினைந்ததுவே. 110

காலைப்பருப்பதந்தனை நீங்கி கபிலையிடத்துடன்கூடியபின், கோலமான் கலையும்வாய்கள் கொலையெல்லாந் தான்மறந்து, சூலபாணியை மனதில்வைத்து சுவர்க்கந் தனில் வீடுபெறவேண்டி, ஞாலமதிலே மிருகேந்திரன் நாடியருந்தவந் தன்னில் நின்றான். 111

ஒற்றை

தவசிரண்டும்முடிந்தற்பின் தனிப்புலியுங்காராவும்
சிவனுடையதிருவடியைச் சிக்கெனவேபெற்றனவே
கபிலைகதைதனைவிரும்பிக் கற்றவருங்கேட்டவரும்
குவலயத்தில்வினையொதுங்கிக் குற்றமறவாழ்வாரே. 112

கபிலைகதை முற்றிற்று.

திருமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1936.